அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்: 22 /2017
தேதி: 27.2.2017

## மணப்பாடு படகு விபத்து 10 பேர் பலி

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்.

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே உள்ள மணப்பாடு என்ற சுற்றுலாத்தலத்திற்கு அழகம்மன்புரம் கிராமத்தை சேர்ந்தவர்களும், அங்கு நடந்த கோவில் திருவிழாவிற்கு வந்த திருச்சியை சேர்ந்த சுற்றுலா பயணிகள் சிலரும் சென்ற படகு கடலில் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 10 பேர் பரிதாபமாக பலியான செய்தி அதிர்ச்சியையும், மிகுந்த அதிர்ச்சியையும், வேதனையையும் அளிப்பதாக உள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு என் சார்பாகவும், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மருத்துவ மனைகளில் தீவிர சிகிச்சை பெறுபவர்கள் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

இதுபோன்ற படகு சவாரிகளில் செல்லும்போது, உயிரிழப்புகளை தவிர்ப்பதற்கு தகுந்த பாதுகாப்பு கவசங்களை கண்டிப்பாக அணிந்து செல்வதற்கும், நன்கு நீச்சல் தெரிந்தவர்களை கூடுதலாக நியமிக்கவும், பாதுகாப்பு ஏற்பாடுகளை தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்